விலை முக்காலணா | இலங்கை 8 சதம்

மாலை மணி

(திராவிடர் தமிழ் தினசரி கருத்தேடு)

ஆசிரியர் : மு. கருணாநிதி

MALAI MANI | Tamil Daily

சந்தா விவரம்

1 ஆண்டு ரூ. 18-0-0
6 திங்கள் ரூ. 9-0-0
3 திங்கள் ரூ. 4-8-0

தனிப்பிரதி முக்காலணா. மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

விளம்பர விகிதம்

அங்குலம் பத்தி ஒன்று ரூ. 5-0-0 நீடித்த விளம்பரங்களுக்கு சலுகையுண்டு.

மானேஜர் "மாலை மணி"

Phone: No. 4502

மாலை.2 | சென்னை : 9—6—51 சனிக்கிழமை ★ வெளியூர் : 10—6—51 ஞாயிற்றுக்கிழமை | மணி 181

அடிப்படை நோயை அறிய வேண்டும்

திருடியதாகச் சந்தேகிக்கப்பட்டால்

....

அடித்துக்கொன்று ஆற்றில் எறிவதா?

....

மத்திய பிரதேசப் போலீஸ் குண்டர்கள் சேவை

அகோலா, ஜூன் 8—

கம்போரா (மத்திய மாகாணம்)விலுள்ள ஒரு நிலச்சுவான்தார் வீட்டில் ரூ. 16,000 மதிப்புள்ள சொத்து 1950 நவம்பர் கடைசியில் களவுபோயிற்று. இது சம்பந்தமாகப் பலரைப்போலீசார் கைது செய்தனர். இவர்களுட் சிலரைப் போலீசார் கடுமையான முறையில் சித்திரவதை செய்ததன் பயனாக ஒருவர் உயிரிழந்தார்.

இறந்தவனின் சவத்தைப் போலீசார் ஒரு கோணிப்பையில் சுற்றிப்பூர்ணா ஆற்றில்விட்டுவிட்டனர்.

இறந்தவரின் மனைவி பனி என்பவள் போலீஸ்மீது வழக்குத் தொடர்ந்தாள். போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், சப்இன்ஸ்பெக்டர் 6 போலீஸ் கான்ஸ்டபிள்கள் குற்றம்சாட்டப்பட்டிருக்கின்றனர்.

....

மற்றொரு தெலிங்கானா இளைஞனுக்கு மரணதண்டனை

ஹைதராபாத், ஜூன் 8—

சிறிது காலத்திற்குமுன் 3 காங்கிரஸ்காரர்கள் எவராலோ கொல்லப்பட்டனர். இதுசம்பந்தமாக 17 வயதுள்ள ஜானூர் துர்கையா கைதுசெய்யப்பட்டான் இவன் நலகொண்டா மாவட்டத்தைச் சேர்ந்த இல்பாகூடம் கிராமத்தைச் சேர்ந்தவன். இவன்மீது கொலைக் குற்றம் சுமத்தி விசேஷக் கோர்ட்டில் இவனுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

இந்த 17 வயதுச் சிறுவன்மீது கொலைக்குற்றத்தை மெய்ப்பிக்கத் தக்க ருசுக்கள் இல்லையாயினும் விசேஷ நீதிமன்றத்தார் இவனுக்கு மரணதண்டனை விதித்துவிட்டனர். இவனுக்கு மன்னிப்பளித்துத் தண்டனையை ரத்து செய்யுமாறு ஹைதராபாத் ராஜ பிரமுகர்களுக்கும், இந்தியா தலைவருக்கும் விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்டிருக்கிறது.

குடிகாரனை அடக்கி இருந்தால்...!

.... (0) ....

கைத்தறி நெசவாளர் மாநாட்டில் அறிஞர் அண்ணாவின் அரிய உரை

ஸ்ரீவில்லிபுத்தூர், ஜூன் 6—

இங்கு மேமாதம் 27-ந் தேதி நடைபெற்ற இராமநாதபுரம் ஜில்லா கைத்தறிநெசவாளர்கள் மாநாட்டில் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா பேசிய பெச்சின் சுருக்கும்—

தலைவர் அவர்களே! தோழர்களே!

இன்று, இவ்வளவு ஆயிரக்கணக்கான கைத்தறி நெசவாளர்கள் இங்குக் கூடி இருப்பது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். இந்த மாநாட்டில் காலைமுதல் மாலை வரை பல கட்சித் தோழர்கள் தங்கள் கருத்துக்களை வெளியிட்டார்கள். நான் இப்பொழுது உங்களிடையே அரசியல்கொள்கை பற்றிப்பேசப் போவதில்லை. அரசியல் பற்றிப் பேசவேன் என்று நீங்கள் யாராவது நினைத்தால் அது உங்களுக்கு ஏமாற்றத்தைத் தான் தரும். அரசியல் பற்றிப் பேசுவதற்கு எனக்கு வேறு மேடைகள் இருக்கின்றன! ஆகவே இங்குஅரசியல் விஷயத்தைப்பற்றிப் பேசாமல் கைத்தறி நெசவாளர்களின் குறைகளைப் பற்றி மட்டும் பேச விரும்புகிறேன். காலையிலே பேசிய எனது நண்பர்கள்பலர் நெசவாளர்களுக்குத் தேவையான பிரச்னையைப்பற்றி மிகவும் நல்ல முறையில் புள்ளி விவரத்தோடு பேசினார்கள் எல்லோரும், இந்த நெசவுத் தொழிலில் சம்மந்தப் பட்டவர்கள்!

சட்டசபை உறுப்பினர் தோழர் கன்னியப்பன் பேசும் போது இந்த சர்க்கார், நெசவுத் தொழிலாளர் விஷயத்தில் நடந்து கொண்டு வரும் ஊழலைப்பற்றிப் பேசினார். மற்றும் அடக்குமுறை பற்றியும் பேசினார்கள். ஆந்திரத்தொழர் அக்கரை கோட்டையா பேசும் போது சிறிது பொறுமை இழந்து காணப்பட்டீர்கள். காரணம அவர் பேசிய மொழி உங்களுக்குப் புரியவில்லை என்பதை நான் உணருவேன். என்றாலும், நமது தோழர்கள் சற்றிப் பொறுமை காட்டியிருக்கவேண்டும். இந்தத் தோழர் நாம் கேட்கும் திராவிடக் கூட்டாட்சியில் உள்ள இனத்தைச் சேர்ந்தவர். அவர் பேசுவது சரியோ, தப்போ பொறுமையோடுதான் நாம் கேட்கவேண்டும்

நாம் பொறுப்பற்ற முறையில் நடந்துகொண்டால், பேசவந்த தோழர் மனக்கிலேசம் அடைந்து விட்டால் பின்னர் நமது கோரிக்கை நிறைவேற முடியுமா? இன்று நூல் பிரச்னையின்மீது ஆந்திரத் தோழர்கள் நம்முடன் ஒரே மேடையில் காட்சியளிக்கிறார்கள். இன்று வெறும் நூல் பிரச்னையாக உள்ளது

(3 ம் பக்கம் பார்க்க)

இந்திய அரசாங்கத்தின் மீது வழக்கு

புதுடில்லி, ஜூன் 8—

இந்திய அரசியல் அமைப்புத் திட்டத்தில் பேச்சுரிமையையும் எழுத்துரிமையையும் பாதிக்கும் வண்ணம் செய்யப்பட்டிருக்கும் திருத்தத்தை எதிர்த்து இந்திய சுப்ரீம் நீதிமன்றத்தில், ராம்கட் ராஜ்பிரமுகர் இந்திய அரசாங்கத்தின்மீது ஒரு வழக்குத் தொடுக்க உத்தேசித்திருக்கின்றார் என்று தெரிகிறது.

....

12 அவுன்ஸ் ரேஷன்

புதுடில்லி, ஜூன் 8—

இப்போது 9 அவுன்ஸாக உள்ள ரேஷனைத் தேர்தல் நெருக்கத்தில அதாவது செப்டம்பர்-அக்டோபர் மாத வாக்கில் 12 அவுன்ஸாக உயர்த்துவதற்கு ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது என அறியக் கிடக்கிறது.

———

'பிணம் எழுந்து கத்தியது!'

கொழும்பு, ஜூன் 6—

கொழும்பு ஆஸ்பத்திரி சவ பரிசோதனை கிடங்கில் அனுமதிக்கப்பட்ட பிணம்' எழுந்து கத்தியது ஆஸ்பத்திரியிலுள்ள நர்ஸ்களையும் டாக்டர்களையும் திக்பிரமை அடையச் செய்திருக்கிறது.

ஒரு ஸ்திரீயின் சவம் இப்பரிசோதனை கிடங்கில் வைக்கப்பட்டிருந்தது. இவள் இறந்ததாகக் கருதப்பட்டாளாயினும் உண்மையில் பிரக்ஞை இழந்து இருக்கவேண்டும் என்று நம்பப் படுகிறது.

பிரக்ஞை வரும் சமயத்தில் கை மோதிரத்தை யாரோ கழற்றுவது போல் இருக்கவே இவள் எழுந்து கத்தியிருக்கிறாள் பின்னர் இவள் சிகிச்சைக்காக டாக்டர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறாள்.

....

ஹைக்கோர்ட் நீதிபதி வீட்டில் களவு

பம்பாய், ஜூன் 9—

பம்பாய் ஹைக்கோர்ட் நீதிபதி செயினனி என்பவர் குடும்பத்துடன் வெளியூர் சென்றிருந்த சமயத்தில், 6-ந் தேதியன்று இரவு, அவர் வீட்டில் திருடர்கள் புகுந்து திருடினர். திருட்டுப்போன சொத்து எவ்வளவென்று தெரியவில்லை

மாலை மணி

சென்னை 9-6-51 சனிக்கிழமை

காற்றோடு போகிறது!

"இந்தியாவில் உணவுப் பஞ்சம் அதிகம்"

— ராஜகுமாரி அமிர்தகௌரி

"இந்தியாவில் பட்டினிச்சாவு எதுவுமே கிடையாது. எங்களால நிலைமையைச் சமாளிக்கமுடியும்"

— வி. கே. கிருஷ்ணமேனன்

"உணவுப் பிரச்சினைதான் இன்றைய நமமுடைய உயிர்ப் பிரச்சினை."

— பண்டிதநேரு

"உணவுப் பொருள்கள் இல்லாததால் சென்னை மக்கள் திண்டாடவில்லை. வாங்கும் சக்தி இல்லாமல்தான் வாடிக்கிடக்கிறார்கள்.

— விக்டோரியா

"பஞ்சம்! பட்டினி! மகசூல் குறைவு! பருவ மழை கிடையாது! அடுதத மாதங்களில அவதி அதிகமாகும்."

சர்க்கார் அறிக்கைகள்

* * *

உணவுப் பிரச்சினையைப்பற்றி இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைப பேசிக்கொண்டிருககிறார்கள். பிரச்சினையை சமாளிக்கும் ஆசையைவிட — அதிலே காட்ட வேண்டிய அக்கரையைவிட, பிரச்சினையை ஒருபெரிய மலையாக்கி அந்த மலை வளர்ந்ததற்கான காரணங்களைக் கதை கதையாகச் சொல்லி மஞ்சள் பெட்டியின் 'மகிமையை' மக்கள் மனதிலிருந்து மறைத்துவிட முயலுகிறார்கள். அப்படி முயலுமபோது ஒவ்வொருவரும் தாங்கள் தப்பிததுக்கொள்ளப பார்க்கிறார்கள். தங்கள் பதவி நீடிக்க—பண அருவி தடைபடாமலிருக்கப் பார்ததுக் கொள்கிறார்களே தவிர-பசியால் புழுவெனத துவளுபவர்களைத் துன்பத்திலிருந்து கரையேற்றத் துணிவில்லை. இந்தியாவிலே நோய் அதிகமாய் இருககிற தென்றால சுகாதார மந்திரியான தனக்கு இழுக்கு என்பதற்காக உணவு கிடைக்கவில்லை உடல்கள் மெலிந்தவிட்டன என்று அமிர்தகௌரி பேசிவிட்டார்கள்.

இந்தியாவைப் பற்றி இங்கிலாந்து பெருமைக் குறைவாக எணணுமே என வெட்கப்பட்டு வெடித்துச் சிதறும் வேதனைகளை வெளியிடாமலே மறைக்கப் பார்க்கிறார் ஹைகமிஷனர் மேனன்.

நெருக்கடியான சமயத்தில் வாயளவிலாவது தமபட்டம் அடிக்காவிட்டால் வரப்போகும் தேர்தலில் கஷ்டம் ஏற்படுமே என்று உணவுப்பிரச்சினை உயிர்ப் பிரச்சினை என்று கூறிவிட்டார் நேரு.

முன்ஷியிடம் முகாரி பாடிக் காட்டினார். முட்டிக்கொண்டார். மோதிக் கொண்டார். பீஹாரைப் போல பாவித்து சென்னையின் உணவுக் கஷ்டத்தை நீக்குக என்று பிரார்த்தனை செய்தார் அந்த விக்டோரியா, சென்னை மக்களின் அத்திரத்தை அடக்குவதற்காக ஒரு சிறு சமாதானமாக "உணவுப் பொருள் கிடைக்கிறது; ஆனால் வாங்கும் சக்தி குறைந்துவிட்டது" என்று வார்த்தை ஜாலம் செய்கிறார்.

இவர்களுடைய முரணபட்ட பேச்சுக்களால் தலை வேதனையடைந்த அமெரிக்க ஜனநாயகக் கட்சிப் பிரதிநிதி ஜேம்ஸ் ரிச்சட்ஸ் என்பவர்,

"இந்தியாவின் உணவு நிலைமை பற்றி இந்திய சர்ககார் அதிகாரிகள் விடுவிக்கும் அறிக்கைகள் உணவு சகாய மசோதா ஆதரவாளர்களுக்கு உபத்திரவமாக இருக்கிறது." என்று சங்கடத்தோடு கூறியிருக்கிறார்

உணவு நிலைமை உயர்ந்திருக்கிறது. தேனும பாலும் தெருவெல்லாம் ஓடுகிறது என்ற பொய்யையாவது கட்டுப் பாடாகச் சொல்லவேண்டும் அல்லது சுடுகாட்டுக்குப் பவனி போகும பட்டினிசாவு ஊர்வலங்கள்-தூக்கிலே தொங்கிய தவணை டவயிறுகள்-பிள்ளையை விற்பனை செய்யும பெண்மணிகள்—இந்த உண்மைகளையாவது ஒப்புக்கொண்டு பேச வேண்டும. எதுவுமில்லாத இரண்டுங்கெட்டான் நிலைமையிலே ஏதேதோ பேசுகிறார்களே என்றுதான பரிதாபம் ஏறபடுகிறது நமக்கு!

பஞ்சத்தை வைத்துக்கொண்டு நாடகமாடுகிறார்கள் நாடாள வந்தவர்கள். பசி பொறுக்கமுடியவில்லை யென்பவனிடம் வனமகோற்சவ விளம்பரம செய்வது; வளமையை கொழிக்கச் செய்வதாகக் கொக்கரித்து 'பானிவாலா' என்பவருக்குப்பாயிரமபாடுவது, இப்படி மந்திரி தர்பார் நடத்துகிறார் முன்ஷியார்.

இந்த ஏமாற்று வித்தைகள் பலிகக வில்லை இப்போது சென்ற ஆண்டு வனமகோற்சவத்தில் மூன்று கொடி செடிகள் நட்டார்கள். அதைப்பற்றி இப்போது முன்ஷி கூறுகிறார்; மூன்று கோடியில ஐமபது சதவிகிதம் வாடாமலிருக்கின்றனவாம! குறைந்தபட்சம் இருபது சதவிகிதம மரங்கள் எஞ்சியிருப்பதாகத் தெரிய வருகிறதாம்! மொத்தம சுமார் ஒரு கோடி மரங்கள் பிழைத்திருக்கலாமாம்! இந்த வருடமும வனமகோற்சவ திட்டம வகுக்கபபடுகிறது. வயிற்றெரிச்சலைக் கேட்க நாதியில்லை! வரண்டுபோன குரலை கவனிககத் திறமையில்லை! 'அய்யோ, அம்மா பசி பசி' என்ற அவலச் சொல்லை அழிக்க அருகதையிலலை! வனமகோற்சவம், பானிவாலா! வெட்கமும துக்கமும கலந்த செய்திகள. அதோடு மட்டுமலல, பூமி சேனை' என்று, ஒன்று புறப்படுகிறது புலமபலை நீக்க புத்தியை உபயோகிக்கத் தெரியாதவர்கள் 'ஏதாவது செய்கிறோம' என்ற ஏமாற்றுத் திரைகளைப போட்டு வாழ எணணுகிறார்கள். என்னென்னமோ செய்யப் போகிறோம என்று எக்காளமிட்டவர்கள, ஏதாவது செய்கிறோம என்ற மயக்கு மொழியில் இறங்கியிருக்கிறார்கள். நேற்று பேசியது இனறு காற்றோடு போகிறது. சுகம்-சோபிதம-சௌக்யம - சௌந்தர்யம-சௌஜன்யம்-எத்தனை இன்பமான வார்த்தைகளைப் பேசினார்கள்!

அந்தப்பேச் செல்லாம் காற்றோடு போகிறதே இப்போது! பேச்சு மட்டுமா, மானம் மரியாதை கூடத்தான்!

தங்கப்பழம்-சிறை மாற்றம்

—————(0)—————

கடலலையென மக்கள் திரண்ட காட்சி

மதுரை, ஜூன் 7—

இன்று காலை 10 மணிக்குத் தூத்துக்குடி "கிளர்ச்சி ஆசிரியரும், 'சவுக்கடி'" நூலை வெளியிட்டவருமான தோழர் எம். எஸ் தங்கப்பழம் அவர்கள் 7 வார காலம் தண்டனை அடைந்து, இங்கர் சென்ட்ரல் ஜெயிலுக்குக் கொண்டு போகப்பட்டனர்.

நேற்றுமாலை 4-15 மணிக்குத் தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் வண்டியில் தோழர் தங்கப்பழம் மதுரை வருவதாகச் செய்தி நகரெங்கும் காட்டுத் தீயைப்போல் பரவியது. அதன் காரணமாக நூற்றுக்கணக்கான இயக்கத்தொண்டர்கள் புகைவண்டி நிலயம் வந்து கூடியிருந்தனர்.

குறிப்பிட்ட வண்டியில் தோழர் தங்கப்பழம் வரவில்லை என்றதும் பெரும் ஏமாற்றத்துடன் வீடுதிரும்பினர். பின்னர் அடுத்தடுத்துவரும் வண்டிகளுக்கெல்லாம் தொண்டர்கள் வந்து தங்கப்பழம் அவர்களை எதிர்பார்த்த வண்ணமிருந்தனர்

6-6-51 அன்று இரவு 7-30 மணி வண்டியில் கிரிமினல் கைதிகள் பலருடன் தோழர் தங்கப்பழம் அவர்கள், ஓர் நோயாளியுடன் சேர்த்து விலங்கிடப்பட்டு மதுரை புகைவண்டி நிலையம் வந்தடைந்தனர். இக்காட்சி அங்கு கூடியிருந்த மக்களிடையே பெரும் அதிருப்தியைக் கிளரிய வண்ணமிருந்தது என்றபோதிலும் யகக முன்னணி வீரர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, தொண்டர்கள் யாதொரு விதமான கோஷங்களோ, ஆர்ப்பாட்டங்களோ செயயவில்லை.

இவர்களுக்குப் பாதுகாப்பாக ஏராளமான போலீசார், ரிசர்வ் சார்சண்ட் தலைமையில் வந்திருந்தபடியால், சிறைக்குச் செல்லும் தோழர்கள் தங்கப்பழம் அவர்களிடம் பேசவோ, எந்தவிதமான குறிப்புகள் கேட்கவோ அனுமதிக்கப்படவில்லை.

பின்னர் புகைவண்டி நிலயத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷனுக்குத் தோழர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு தோழர் எஸ். முத்து மட்டும் சென்று தோழர் தங்கப்பழம் அவர்களிடம் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டு வந்தார்கள். இரவு முழுவதும் தோழர் தங்கப்பழம் இவர்கள் இங்கர் வடக்கு சர்க்கிள் போலீஸ் காரியாலயத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்து இன்று காலை சென்ட்ரல்சிறைச்சாலைக்கு அழைத்துச்செல்லப்பட்டார்.

தோழர் தங்கப்பழம் அவர்களோடு தோழர் எம். எஸ் சிவசாமியும் வந்துள்ளார்கள். தோழர் தங்கப்பழம் அவர்கள் முகமலர்ச்சியுடனேயே காணப்பட்டார்.

வழிநெடுக!

தோழர் தங்கப்பழம் அவர்கள் தூத்துக்குடியிலிருந்து மதுரைவரும் வழியில் மணியாச்சி, தட்டம்பூர், கோயில்பட்டி, சமத்தூர், விருதுநகர், திருமங்கலம் ஆகிய புகைவண்டி நிலயங்களில் எல்லாம் இயக்கத்தோழர் ஏராளமாக வந்திருந்து, தோழர் தங்கப்பழம் அவர்களை வாழ்த்தி வழி அனுப்பியதாகத் தெரிகிறது. (ந. வி.)

———

அரசாங்கத்திற்குத் திறமையில்லை

புதுடில்லி, ஜூன் 9—

தடித்தரக ஜவுளிகள் ஏற்றுமதி வரியை 25 சதவிகிதம் உயர்த்தியதை யூனியன் பார்லிமெண்ட் 7-ந் தேதி அங்கீகரித்தது.

இந்தத் தீர்வையை ஒருவருடத்திற்கு முன்னரே அதிகரித்திருக்க வேண்டுமென்றும் அப்படிச் செய்யாததால் வணிகர்கள் 100 க்கு 100 இலாபமடித்தனர் என்றும இதனல் பொதுமககள் அதிகவிலை கொடுக்க நேரிட்டதென்றும், அரசாங்கம் திறமையோடு நடந்து கொள்ளாமல் ஏமாளித்தனமாக நடந்துகொண்டதால், அரசாங்கத்துக்கு ரூ. 25 கோடி நஷ்டமாயிற்றென்றும் தோழர் இராமலிங்கம் செட்டியாரும், தேசாயும் எடுத்துக்காட்டினர்.

....

'பிளிட்ஸ்' ஆசிரியர் ரஷ்யா போகத் தடை

பம்பாய், ஜூன் 8—

"பிளிட்ஸ்" ஆசிரியர்கள் ஆர். கே. கராஞ்சியா, கே. ஏ. அப்பாஸ், விஞ்ஞானி டி. டி. கொசாம்பி நாவலாசிரியர் கிருஷ்ணன் சந்தர், பர்துகவிசர்தார் ஜாப்ரி ஆகியோர் ரஷ்யாவுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். இவர்களுள் மூவருக்கு இந்திய அரசாங்கம் பாஸ்போர்ட் கொடுத்திருந்தது இப்போது அந்த 3 பாஸ்போர்டையும் ரத்து செய்ததுடன், மற்ற இருவருக்கும் பாஸ்போர்ட் மறுக்கப்பட்டது.

அடிப்படை நோயை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாறி ஈளைகமது திராவிடநாடுபிரச்னை சம்பந்தமாக வந்துவிடலாம். (கைதட்டல்) அதற்குக் குந்தகம் வந்துவிடும் அளவிற்கு நாம் நடந்து கொள்ளக்கூடாது!

தீராத பெரும் பிரச்னை

ஆந்திரத் தோழர் தெலுங்கில் பேசும்போது நல்ல அழகான கருத்துக்களைச் சொன்னார். நமதுதோழர் ஏ. சித்தையன் மொழிபெயர்க்கும் போது அதை விட்டுவிட்டார் என்று கருதுகிறேன். அவர் சொன்னார், தீராத வயிற்றுவலிக்காரனும், தலைவலிக்காரனும் வெறும் மருந்து போடுவதால்மட்டும் அவர்கள் பிரச்னை தீர்ந்துவிடாது. அவர்களுக்கு அடிப்படையில் என்ன வியாதி இருக்கிறது என்பதைக்கவனித்து, அந்த வியாதியைப் போக்க மருந்துதர வேண்டுமென்று சொன்னார். இது முற்றிலும் உண்மை! இன்று நெசவாளர்களுக்கு நூல் போதிய அளவு கிடைத்துவிட்டால், அத்துடன் நெசவாளர்கள் பிரச்னை தீர்ந்து விடாது! நெசவாளர் பிரச்னை இன்று தீராத பெரும் பிரச்னையாகிவிட்டது. நூல் கிடைத்து, அதைத் துணியாக நெய்துவிட்டால், பின்னர்த் துணி விற்கவேண்டும். இது போல பலவிதபிரச்னைகள்வந்துகொண்டே இருக்கும். ஆகவே அடிப்படை பிரச்னையைக் கவனித்து, தீராத தலைவலிக் காரனுக்கு மருந்து தந்து குணப்படுத்துவது போன்று நெசவாளர் பிரச்னையைத் தீர்க்க முயல வேண்டும். இந்த மாநாட்டில் காங்கிரஸ்காரர்களும் வந்துள்ளார்கள். தி. மு. கழகத் தோழர்களும் வந்துள்ளார்கள். தி. மு. கழகத் தோழர்களும் வந்துள்ளனர். இந்த நிலையில் தி. மு. கழகத் தோழர்கள் நினைத்தால் இந்த மாநாட்டில் சர்க்காருக்கு எதிர்ப்பாகக் காரியம் செய்திருக்க முடியும். இங்குப் பலர் காந்தியாரையும், காங்கிரஸையும் புகழ்ந்து பேசினார்கள். அது போன்று நானும், எனது நண்பர்களும் தலைவர் பெரியாரைப்புகழ்ந்து பேசி இருந்தால், இந்த மாநாடு திராவிட முன்னேற்றக் கழக மாநாடு என்று முடிவு கட்டிவிடுவார்கள்! தோழர் பூர்ணய்யா போன்ற தேசியத் தோழர்கள் விடுதலைப் போராட்டத்தில் இறங்கவில்லையானால் இன்று காங்கிரஸ் அதிகாரத்திற்கு வந்திருக்க முடியாது.

என்மீது சந்தேகம்......!

இது போன்ற மாநாடுகளுக்கு நான் வந்தால், இந்த மாநாட்டை நடத்துகிறவர்களுக்குத் தொல்லைகள் அதிகம் வருகின்றன? காரணம் நான் சர்க்காரால் சந்தேகிக்கப்படுகிறவன். ஆகவே நான் இங்கு வந்தால் இந்த மாநாட்டை எப்படியும் தடுக்க வேண்டுமென்று திட்டமிடுகிறது சர்க்கார். ஆகவேதான் நான் இன்று நெசவாளர்கள் போராட்டத்திலும மற்றுமுள்ள வேலைகளிலும் நேரடியாகக் கலந்துகொள்ள முடியவில்லை; அது மட்டுமல்ல! நமது அரசாங்கத்திற்குப் போதிய அதிகாரம் கிடையாது. நெசவாளர்கள் பிரச்னை மத்திய சர்க்காரிலே சம்பந்தப்பட்டுள்ளது. ஆகவே அதிகாரமில்லாத சர்க்காரோடு நடத்தும் போராட்டத்தில் நான் கலந்துகொண்டு என்ன பிரயோசனம். கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் அத்தனைபேரும் ஒருமித்த கொள்கை அடையும்போது நான் அதில் கலந்துகொள்வேன். காலையிலிருந்து பேசிய தோழர்கள் எல்லாம், இங்கு போதிய நூல் இருக்கிறது என்றும், இருந்தும் நெசவாளர்களுக்கு நூல் சப்ளை சரிவர கிடைப்பதில்லை என்றும் சொன்னார்கள். காது இருக்கிறது ஆனால் கூப்பிட்டால் கேட்பதில்லை! கண் இருக்கிறது ஆனால் பார்வை தெரிவதில்லை என்றால் இதன் அர்த்தம் என்ன? நம்மாகாண சர்க்கார் காதிருந்தும் செவிடராய், கண்ணிருந்தும் குருடராய்த்தான் இருக்கிறார்கள்.

கேட்டால் கோடுப்பவர்கள்தானே!

மத்திய சர்க்காரிலே இருந்து இத்தனை ஆயிரம் பேல்நூல் உடனே அனுப்பு என்றால், இந்த மாகாண சர்க்கார் உடனே அந்த நூல்பேல்களை அனுப்பிவைத்துத்தானே ஆக வேண்டும். இவர்கள்—கேட்டால் கொடுத்துவிட்டு இருப்பவர்கள் தானே! நண்பர் கன்னியப்பன் பேசும்போது சொன்னார்; நூல்தர முடியாத மந்திரிகள் பதவியை விட்டு வெளியே வாருங்கள் என்று சொன்னார். வருவார்களா மந்திரிகள். வரமுடியுமா?

"குறிப்பிட்ட பிரச்னைமீது மந்திரிகள் எல்லாம் இராஜிநாமா செய்துவிட்டால் என்ன செய்வது. மந்திரி சபையை நடத்துவது யார்? நாங்கள் இங்கு இருந்தால்தானே ஏதாவது செய்ய முடியும்"

இது நமது மதியூக மந்திரி கனம் கோபால் ரெட்டியார் பேச்சு! இப்படிப் பேசக் கூடியவர்களா பதவியை விட்டு வெளிவருவார்கள்? பொதுமக்கள்தான் இவர்களை வெளியேற்ற வேண்டும். மீண்டும் மந்திரிமார்கள் உங்களிடையே வரும்போது கேளுங்கள் நீங்கள் நூல் தந்த கட்சிக்காரரா அல்லது தடிகொண்டு தாக்கிய கட்சிக்காரரா என்று கேளுங்கள். அதைத்தவிர வேறு வழி இல்லையே?

அரசியல் விபசாரம்!

நாங்கள் தேர்தலிலே நின்று அரசியலுக்கு வருவதானால், இந்த நூல் பிரச்னை ஒன்றே போதும் எங்களுக்கு! இதை வைத்துக்கொண்டு சர்க்காருக்கு அறைகூவல் விடுத்திருப்போம். ஆனால் எங்கள் திட்டம் அதுவல்ல! எங்களுக்கு வேலை அதிகம் இருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தைபயன்படுத்திக்கொண்டு அதிகாரத்திற்கு வருவதென்பது சுத்த அரசியல் விபசாரத்தனம் என்பேன். இச்செயலைச் செய்ய எங்கள் கட்சி ஒருக்காலும் சரிப்படாது. எனக்கு முன் பேசிய நண்பர் சொன்னார், நெசவாளர்களின் போராட்டத்திலே காங்கிரஸ்காரர்களாகப் பார்த்து நன்றாக அடிக்கிறார்கள் என்றார். இது போன்று அடிபடுவது இதுதான் முதல் தடவை அல்லவே! நாங்கள் அன்று இந்தி கூடாது-தகாது என்று சொன்ன குற்றத்திற்காகப் போலீஸார் தடிகொண்டு தாக்கினார்களே எங்கள் தொண்டர்களை லாரியில் ஏற்றிச் சென்று 40-50 மைல்களுககு அப்பால் சென்று நடுக்காட்டில் இறக்கிவிட்டார்களே! இதில் பெண்கள் பூர்ண கர்ப்பவதி என்று கண்டும் இது போலச் செய்தார்களே! இப்பொழுதாவது நெசவாளர்களைக் காட்டில் இறக்கிவிட்டவுடன் கன்னியப்பன் பிளஸரில் சென்று அவர்களை அழைத்து வந்து விடுகிறார் என்று சொன்னார்களே! நாங்கள் அப்படி அல்லவே! எங்களிடம் பிளஷர் வைத்துக் கொள்ள வசதிகள் இல்லையே! அன்று நடைபெற்ற இக்கொடுமையை இவர்கள் கண்டித்திருந்தால், இன்று இந்த நிலைமை ஏற்பட்டிராது. அப்போதுகூடக் கன்னியப்பன் சட்டசபை உறுப்பினர் தானே? கூறினாரா ஒரு வார்த்தை இதுபற்றி! அன்று இவர்களே இந்த அடக்கு முறையைப் பொது மக்கள்மீது நடத்திக் காட்டினார்கள், இன்று இவர்களை அதே செயல்கொண்டு அடக்குகிறார்கள். இதில் தவறு என்ன இருக்கிறது.

குடிகாரனை அடக்கி இருந்தால்!

ஓர் குடிகாரன் நன்றாகக் குடித்துவிட்டு பக்கத்து வீட்டில் கலகம் செய்கிறான் என்றால், அவனைமுதலில் எல்லோருமாகச் சேர்ந்து அடக்கி இருக்கவேண்டும். அதை விட்டு-விட்டு, அவன் கலகம் செய்வது நமக்குச் சண்டைக்காரர் வீடு தானே பரவாயில்லை நன்றாக நடைபெறட்டும் என்றுநினைத்தால் நாளை நமதுவீட்டிலே வந்துகுடிகாரன் கலகம் செய்யத்தானே செய்வான் இதை இவர்கள் உணரமறுக்கிறார்கள்! சேலத்திலே சிறைச்சாலையிலே நடை பெற்றதே கொடுமை! அப்பொழுது இவர்கள் புறப்பட்டிருக்கவேண்டாமா? புரட்சிக்கல்ல, புத்தி சொல்ல! நாட்டை ஆளுவதற்கல்லவா உங்களை அனுபபினோம். ஆனால் இன்று உன்னுடைய ஆட்சியால் எத்தனை பேர் செத்து மடிந்தார்கள் என்பதைச் சற்றுச் சிந்தித்துப்பார்! அப்பொழுதெல்லாம், கொடுமை புரியப்பட்ட போதெல்லாம் இந்த ஆளவந்தவர்களைக் கேட்டிருந்தால், மந்திரிம... களைக் கேட்டிருந்தால், இன்... இது போன்று கொடுமைகள் ந...ழுமா? அன்று சும்மா இருந்த... கள், இன்று போலீஸார் அடிக்கிறார்களே என்றால் என் செய்வ... போலீஸார் நம்மை வேண்டுமென்... அடிக்கிறார்கள். அவர்கள் நம்... அடிப்பதற்கு உண்மையிலே... ஆசை இருக்குமென்று கருதுகிற... கள்! (பலத்தசிரிப்பு) இன்று ப...விக்கு வந்துள்ளவர்கள் தியாகிக... என்ற பெயரால், ஆட்சிப் பொறு... பேற்றவர்கள் ஆளத்தெரியாதவ... கள், திறமையற்றவர்கள், ஆகவே இவர்கள் ஆட்சிப் பீட மேறத்தகுதியற்றவர்கள் என்று கூறுகிறேன்.

பின்னல் உள்ள கரத்தை மடக்குங்கள்

இன்றைய நெசவுத்தொழிலாள... கள் பிரச்னை அரைமணி நேரத்தி... கூடிப்பேசினால் தீர்ந்துவிடக்கூடி... பிரச்னை. இது இவ்வளவு தூர... நீண்டுகொண்டு போகக்காரண... என்ன? இந்த மாகாண சர்க்காரி... பின்னால் ஓர் பலமானகரம் அவ... களை அழுத்திக்கொண்டிருக்கிறத... அக்கரத்தை முதலில் எல்லோரும... ஒன்று சேர்ந்து அகற்றவேண்டு... அக்கரம் நீங்கினால் இன்றைய மந்திரிகள் நாம் சொன்னபடி ஆட... கடமைப்பட்டவர்கள் ஆகவேதான் அந்தக்கரம் விலக்கப்படவேண்டு... என்னும் கொள்கையுடையவன் நான்! இந்தமுறையை விட்டு-விட்... விட்டிறகொரு பிள்ளை தாருங்கள்... போராட்டத்திற்குஎன்றால் இதால் அர்த்த மிருக்க முடியுமா? வ. உ. சிதம்பரனார் கேட்டார் தந்தோம், காந்தியார் கேட்டார் தந்தோம். இன்னும் இப்படியே போராட்டத்திற்கென்றே மக்களை அனுப்பி... கொண்டிருந்தால், மக்கள் என்று தான் அறிஞர்களாகவும், விஞ்ஞானிகளாகவும் ஆகமுடியும் என்பதைச் சற்று சிந்தியுங்கள்! சிந்தித்து நல்ல முடிவு செய்யுங்கள் என்று கூறிக்கொண்டு, சென்னையில் நடைபெறும் போராட்டத்திற்கு உதவி செய்ய கேட்டுக் கொண்டார்.

கூட்டத்தில் ரூ. 155-0-0 வசூலாயிற்று! இதைக் கூட்டத்தால "அண்ணா" அறிவித்துவிட்டுதனது பிரசங்கத்தை முடித்துக் கொண்டார்கள்.

(ச நி)

தெ. ஆ. மாவட்ட

சிறு மதுரை தி. மு. கழக

திறப்பு விழா

12—6—51 மாலை 5.30 மணிக்கு

தோழர்கள் என். வி. நடராசன், ஏ. கே. வேலன்

ஆகியோர் பேசுவர்

மாலை 4-மணிக்கு நாகூர் அனிபா

இசையரங்கு நடைபெறும்.

அனைவரும் வருக — செயலாளர்

Printed & Published by T. M Parthasarathy at the Mercantile Press, 2/45 Muthuma[illegible] Chetty Street, Madras-1.

E. S. L. C. மெட்ரிக்., S. S. L. C.

(அக்டோபர், மார்ச் - பழைய & புதுப்பாடத் திட்டப்படி.)

மாணவர்களுக்கு வெற்றி நிச்சயம்

திருச்சி டியுடோரியல் ஹைஸ்கூல்

திருச்சி ஆபீஸ்:	மதுரை கிளை ஆபீஸ்:
தியேட்டர் பில்டிங்ஸ்,	ஹமீதியா பில்டிங்ஸ்
போன் நெ. 74. த. பெ. நெ. 330	59, டவுன்ஹால் ரோடு
தெப்பக்குளம் போஸ்ட்,	த. பெ. நெ. 43-H. P. O.
திருச்சிராப்பள்ளி	மதுரை

11-6-1951-ல் ஆரம்பம் !

பயிற்சி நேர்முகம் தபால் & மூலம்

ஹாஸ்டல் & லேபாட்டரி வசதி உண்டு.

திறமை மிகுந்த அனுபவமுள்ள ஆசிரியர்களால் சிறந்த பயிற்சி அளிக்கப்படுகிறது

அட்மிஷன் முடிவதற்குள் முந்துங்கள் !

P. N. ராமன் B. A. (Hons) L T பிரின்சிபால்

இனி நடப்பவை

திண்டுக்கல்: 10-6-51ல் ஞாயிறு மாலை 3 மணிக்கு செட்டியார் சந்து 3 எண் இல்லத்தில் தி. மு. க. செயற்குழு கூட்டம் நடைபெறும். அதுபோது எழுத்துரிமை, பேச்சுரிமை மாநாட்டுக்கு செயற்குழு அமைக்கவிருப்பதால், சின்னாளப்பட்டி, சித்தையன்கோட்டை, ஆத்தூர் உறுப்பினர் கட்டாயம் கலந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

* * *

அய்யாவல்லூர்: 10-6-51 ஞாயிறு மாலை மாலை5-30 மணிககு நடக்கும் தி. மு. க. பொதுக்கூட்டத்தில் எல் ஆர் கணபதி, என். எஸ். இளங்கோ மற்றும் பலர் பேசுவர்.

* * *

மேட்டுப்பாளையம்: 10-6-51 ஞாயிறு தி. மு. க. திறப்பு விழா நடைபெறும். விழாவில் பல முக்கியத் தலைவர்கள் கலந்துகொள்கின்றனர். இரவு 'ஒரே முத்தம்' என்ற நாடகம் நடைபெறும்.

* * *

திருத்தங்கல்:—தி. மு. கழகநிர்வாகக் கமிட்டிக் கூட்டம் 10-6-51 ஞாயிறு காலை 10 மணிக்கு நகர் நந்தவனத்தில் நடைபெறும் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் வருகைதருமாறுகேட்டுக் கொள்ளப்படுகிறது.

....

செய்திச் சுருக்கம்

பிலானியில் மத்திய ரேடியோ எலக்ட்ரானிக் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை நிறுவ பிர்லா கல்வி டிரஸ்ட் சார்பில் ஜி. டி. பிர்லா ரூ. 21 லட்சம் கொடுத்திருக்கிறார். பிலானியைவிட்டு வேறெங்காவது இந் நிலையத்தை அமைப்பதாயின் அவர் பணம் தரமாட்டாராம்.

* * *

வரும் பொதுத் தேர்தலில், ஆர். எஸ். எஸ். ராமராஜ்ய பரீஷத், இந்து மாகாசபை ஆகிய வகுப்புவாத ஸ்தாபனங்கள் ஒன்றுகூடி 2000 ஸ்தானங்களுக்குப் போட்டியிட ஏற்பாடு செய்து வருகின்றன.

த. மா. தி. மு. க. மாநாட்டு வரவேற்புக்குழு-செயற்குழு கூட்டங்கள்

தஞ்சை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாட்டு வரவேற்புக்குழு செயற்குழு கூட்டங்கள் 17-6-51 ஞாயிற்றுக் கிழமை மாலை 3 மணிக்குக் கும்பகோணம், பஞ்சுக்காரத்தெரு, பெரியார் மாளிகையில் நடைபெறும். அவ்வமயம் மாநாட்டு வரவு செலவு கணக்கு முடித்துப் பத்திரிகைகளுக்கு அறிக்கை அனுப்பப்படும். வரவேற்புக்குழு உறுப்பினர்கள் இதையே அழைப்பாகக்கொண்டு தவறாது வருமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

குறிப்பு:—டிக்கட்டுகள் பெற்றுக்கொண்ட தோழர்களும் அவரவர்கள் கொடுக்கவேண்டிய தொகையை உடனடியாக அனுப்பி வைக்கும்படி கே. கே. நீலமேகம் எழுதுகிறார்.

....

20,000 காங்கிரஸ்காரர்கள் ராஜினாமா

புதுடில்லி, ஜுன் 9—

உத்தரபிரதேச பார்லிமெண்ட் உறுப்பினர் புரொபெசர் சிவன்லால் சாக்ஸேனா காங்கிரசிலிருந்து ராஜினாமா செய்தார் உத்தரபிரதேசத்தில் சுதாமா பர்ஷாத் என்ற மற்றொரு எம். எல். ஏ. உட்பட 1000 காங்கிரஸ் தொண்டர்களும் 20,000 பிரைமரி காங்கிரஸ் அங்கத்தினர்களும் ராஜினாமா செய்து விட்டார்கள் என்று நேருவுக்குச் சாக்சேனா தெரிவித்துள்ளார்.

தென்னிந்தியாவில் பலர் காங்கிரசை விட்டு விலகுகின்றனர் பெரியசாமிகாடார் ராஜினாமா செய்துவிட்டார். மலையாளத்தில் கேளப்பனும் மற்றும் 82 பேரும் காங்கிரசிலிருந்து ராஜினாமா செய்தனர்.

———

வேலூரில் வேலை தேடித்தரும் ஆபீஸ தலைமைக் குமாஸ்தா எம். டி. கிருஷ்ணசாமி, பூஷணம் நகரில் தம் வீட்டுக்குள் உட்தாளிட்டுக்கொண்டு விஷமுண்டு மாண்டார். இவர் தற்கொலைக்குக் காரணம் தெரியவில்லை. இவருடைய இளம் மனைவி நீலகிரியில் இருக்கிறாராம். இவருக்கு $1\frac{1}{2}$ வயதுள்ள ஆண்குழந்தை ஒன்றிருக்கிறது.

போட்டி நெ. 23. கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர்ட் நெ. 342.

பரிசு ரூ. 30,000 உத்திரவாதம்

எங்கள் சீல்செய்யப்பட்ட ஆபீஸ்விடைக்கு வரிசைக்கு வரிசை எண்ணுக்கு எண் முற்றிலும் சரியான விடைக்கு ஒரு பேவர் லூபா ரிஸ்ட் வாட்ச் & ரூ. 3000

முதல் இரண்டு வரிசைகள் சரியானதற்கு ...	ரூ. 100
முதல் வரிசை சரியானதற்கு ...	ரூ. 25
முதல் வரிசையில் முதல் இரண்டு எண்கள் சரியானதற்கு	ரூ. 10
முதல் வரிசையில் முதல் எண் சரியானதற்கு ...	ரூ. 5

கூப்பன்களை தபாலில் சேர்க்க வேண்டிய கடைசி தேதி 18—6—51 விடை தேதி 30—6—51

118

இந்த சதுரத்தில் 22 முதல் 37 வரையிலுள்ள எண்களை வலமாகவும், மேலிருந்து கீழாகவும், இடமாகவும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினாலும் கூட்டுத்தொகை 118 வரும்படி அமைக்க வேண்டும். ஒரு எண்ணை ஒருமுறைதான் உபயோகிக்கலாம்.

பிரவேசக்கட்டணம்

1 கூபனுக்கு ரூ 1. பிரதி 6 கூபன்களுக்கு ரூ 5 கட்டணத் தொகையை மணியார்டர் அல்லது க்ராஸ் செய்யப்படாத இந்தியன் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்ப வேண்டும். வெள்ளைக் காகிதத்தில் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். இந்த போட்டி சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் எங்கள் தீர்ப்பே முடிவானதும், கட்டுப்படுத்துவதுமாகும். எவ்வித கடிதப்போக்குவரத்தும் வைத்துக்கொள்ளப்படமாட்டாது. மணியார்டர் ரசிதுகளை கூபனுடன் சேர்த்து அனுப்பவேண்டும். போட்டியின் சீலிட்ட விடை 24-6-51ந் தேதி மாலை 5 30 மணிக்கு எங்கள் காரியாலயத்தில் திறக்கப்படும். உள்ளூர் போட்டி நேயர்கள் நேரில் ஆஜராகலாம். 18—6 51ந் தேதியன்றும் பிரவேசக் கட்டணத்துடன் கூப்பனைத் தபாலில் போடலாம். போட்டி எண்ணையும் விலாசத்தையும் ஆங்கிலத்தில் M. O. கூபனிலும் எழுதலாம்.

KISHORE PUZZLES,
No. 23 (M. M. M.) 1/27, R. H. Road, Madras-14

வெளிவந்துவிட்டது !

சாம்பாஜி

ஆசிரியர் :

ஏ. கே. வேலன்

மராட்டியத்தின் விடிவெள்ளி வீரர்
சிவாஜியின் சரிதம தழுவிய
எழில் நிறைந்த உன்னதச் சித்திரம்

விலை ரூ. 1-0-0

மூவர்ண மேலட்டை

விற்பனையாளர்கட்கு தக்க கழிவுண்டு

விவரங்கட்கு :

திராவிடன் பதிப்பகம்

P. B. No 18, வேலூர் N. A.

ஏஜண்டுத் தோழர்கள் கவனிக்க !

நமது ஏஜண்டுத் தோழர்களுக்கு இம்மாதப் பட்டியல் அனுப்பிவைக்கப் பட்டுள்ளது- பட்டியல் பாக்கியை இம்மாதம் 10. ந் தேதிக்குள் அனுப்பி வைக்கத்தவறுவோர்க்கு பத்திரிகை அனுப்பிவைப்பதை நிறுத்தி விடுவதோடு-பாக்கித் தொகையை வசூலிக்கத் தக்க ஏற்பாடு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

நிர்வாகி
" மாலைமணி "

உதவி ஆசிரியர் தேவை

தமிழ்-ஆங்கிலம்-மொழி பெயர்ப்பு தெரிந்த, பத்திரிகை அனுபவமுள்ள உதவி ஆசிரியர் தேவை. உடனே விண்ணப்பித்துக்கொள்ளவும்.

மானேஜர்
"மாலைமணி" சென்னை-1

நாட்டில் நடப்பது

கொத்தமங்கலத்தில் 25-5-51ல் 60 வயது ஆடவனுக்கும், 16 வயது பெண்ணுக்கும் திருமணம் நடந்தது: ஆடவன் செல்வம் படைத்தோன் எனக்காரணம் கூறப்படுகிறது. இப்படி இருந்தால் நாட்டில் விபசாரம் ஏன் நடக்காது. இதை ஆட்சியாளர் அறிய மறுப்பதேன்?